# 7

# "பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது"

*"அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்" (மத். 4:17).*

நான் முன்பு ஒருபோதும் சென்றிராத இடங்களுக்குச் சுவிசேஷக் கூட்டம் ஒன்றில் பிரசங்கிக்கும்படி சில வேளைகளில் கேட்டுக் கொள்ளப் படுவது உண்டு. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளில் நான் இணைந்து ஊழியம் செய்யும் சகோதரர்கள் எனக்குத் தனிப்பட்ட வகையில் பழக்கமற்றவர் களாய் இருப்பார்கள், எனவே நான் ஒரு புதிய அனுபவத்தையும் உறவுகளையும் பெறுவேன். தொலைபேசி மூலமாக அங்குள்ள சபையின் உறுப்பினர் யாரிடமாவது பேசுகையில் அல்லது நிகழ்ச்சி பற்றிய தபாலை வாசிக்கையில், நான் கண்டு மகிழ்வுடன் அனுபவிக்கவிருக்கும் விஷயம் பற்றிய உருவகமொன்று என் சிந்தையில் வடிவமைக்கப்படும். ஊழியத்திற்கான வேளை வந்து சேர்ந்து, நான் கூட்டம் நடக்கும் இடத்திற்கு வந்ததும், நான் எதிர்பார்த்திருந்ததை நான் கண்டறிந்துள்ள வற்றுடன் ஒப்பிடுதல் என்பது மிகவும் ஆர்வத்திற்குரியதாய் இருக்கும். ஒரு சகோதரர் வந்து என்னுடன் கரம் குலுக்குகையில், நான் எனக்குள்ளாகவே, "இந்த மனிதர்தான் என்னுடன் தொலைபேசியில் உரையாடினாரோ" என்று கூறிக்கொள்வேன். அல்லது பேச வேண்டிய நேரத்திற்காக நான் காத்திருக்கையில், நான் சுற்றிலும் பார்த்து, கவனித்து, "இதுதான் நீங்கள் அறிந்து கொள்வதற்கு ஆவலுடன் இருந்த பிராந்திய சபை" என்று எனக்குள்ளே கூறிக் கொள்வேன்.

இதுபோன்ற சில விஷயங்கள் சபையைக் குறித்து வேத வசனங்களில் நடைபெறுகின்றன. தேவனுடைய இராஜ்யமானது வாழ்வில் சித்தரிக்கப் படுவதற்கு முன்பு, தீர்க்கதரிசனத்தில் முன்கண்ணோட்டமிடப்படுகின்றது; இது முதலில் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் தீர்க்கதரிசனத்தில் பாடப் பொருளாய் இருந்து அதன் பிறகு நடபடிகளின் புத்தகத்தில் இது வாழ்கின்ற, இயங்குகின்ற ஆவிக்குரிய சரீரமாக ஆயிற்று.

இவ்விதமாக, இவ்வுலகத்திற்கு சபையின் வருகையானது ஒரு தவறான பிற்சிந்தனையாயிராமல், தெய்வீகமான முன் சிந்தனையாக இருந்தது என்று

நாம் கூற முடியும். இது நித்தியத்தின் கடந்த காலத்தில் அடைய இயலாத் தொலைவில் இருந்து தேவனுடைய முன் தரிசனத் திட்டத்தின் நிறைவேற்றமாக இருந்தது.

வேதாகமம் முழுவதிலும் மூன்று வகையான தீர்க்கதரிசனங்கள் விரவியுள்ளன: பெயர்த் தீர்க்கதரிசனம், இரட்டைத் தீர்க்கதரிசனம் மற்றும் சிறப்பு வகைத் தீர்க்கதரிசனம்.

*பெயர்த் தீர்க்கதரிசனம்* அல்லது விவரிக்கப்பட்ட முன்னுரைத்தல் என்பது எதிர்கால நிகழ்ச்சியுடன் தொடர்புடைய ஒரு குறிப்பிட்ட நபர் அல்லது இடம் தனிப்படுத்தப்பட்டு முன்னுரைக்கப்படும் தீர்க்கதரிசனமாக உள்ளது. உதாரணமாக, பலிபீடத்தில் தூபம் காட்ட ஆயத்தம் செய்து கொண்டிருந்த யெரோபெயாம் அரசனிடத்தில் அவன் பெத்தேலில் அமைந்திருந்த பலிபீடத்தின் அருகில் தேவனுடைய பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமை பற்றிப் பெயர் குறிப்பிடப்படாத தீர்க்கதரிசி ஒருவர் பேசினார். யெரோபெயாமைக் கடிந்து கொள்ளுகையில் அந்தத் தீர்க்கதரிசி, பின்னொரு நாளில் யோசியா என்ற அரசர் வந்து மனித எலும்புகளை அப்பலிபீடத்தின் மீது எரித்து அதன் மூலம் யெரோபெயாமின் பலி பீடத்தைக் கனவீனப்படுத்துவார் என்று கூறினார். இந்தத் தீர்க்க தரிசனமானது, முந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகு தெற்கு இராஜ்யத்தின் நல்ல அரசர்களில் ஒருவரான யோசியாவின் சீர்திருத்தக் காலத்தின் போது நிறைவேற்றப்பட்டது (2 இரா. 23:20).

பெயர்த் தீர்க்கதரிசனத்தின் இன்னொரு உதாரணமாக இருப்பது ஏசாயா 44:28ல் பெர்சிய அரசனான கோரேஸ், என்பவனைப் பற்றியதாகும். இவன் - வாழ்வதற்குச் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னதாகவே ஏசாயாவினால் பெயர் குறிப்பிடப்பட்டு, பாபிலோனிய அடிமைத் தனத்திலிருந்து யூதர்களை விடுவித்து, அவர்களின் தாய் நாட்டுக்கு அனுப்புவித்து எருசலேமைத் திரும்பக் கட்ட உதவுவான் என்று முன்னு ரைக்கப்பட்டார் (ஏசா. 44:28; இ. வ. எஸ்றா 1:1-3). பெயர்த் தீர்க்கதரிசனங்கள் வழக்கமாக வெளிப்படையானவைகளாகவும் சுலபமாகப் புரிந்து கொள்ளப்படக் கூடியவைகளாகவும் உள்ளன.

இரண்டாம் வகைத் தீர்க்கதரிசனமான *இரட்டைத் தீர்க்கதரிசனம்* என்பது, அது உரைக்கப்பட்ட அந்த நாளில் ஒரு பயன்பாட்டைக் கொண்டிருந்ததாகவும், மற்றும் எதிர்காலத்தில் இன்னொரு நாளில் இரண்டாவது பயன்பாட்டைக் கொண்டிருப்பதாகவும் உள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், இந்தத் தீர்க்கதரிசனம் இரு அர்த்தங் களைக் கொண்டிருந்தது, அவற்றில் ஒன்று நிகழ்காலத்திற்கானதாகவும், இன்னொன்று எதிர்காலத்திற்கானதாகவும் இருந்தது. இயேசு கன்னியிடம் இருந்து பிறப்பார் என்பது பற்றிய புகழ் மிக்க வசனப் பகுதியாகிய ஏசாயா 7:14 ஒரு இரட்டைத் தீர்க்கதரிசனம் என்று சிந்திக்கப்பட வேண்டியதாகும். அது ஆகாசுக்கு அவனது எதிரிகளான ரேத்சீன் மற்றும் பெக்கா என்பவர்கள் ஒரு குறுகிய காலத்திலேயே காட்சியிலிருந்து மறைவார்கள் என்ற உற்சாகமூட்டும் செய்தியை வெளிப்படுத்தியது; மேலும் அது, எதிர் காலத்தில் கன்னியிடம் இருந்து இயேசு பிறக்கும் அற்புதமான நிகழ்வைப்

*பற்றியும் முன்னுரைத்தது. கன்னியிடம் இருந்து பிறத்தலின் நிகழ்வு பற்றி விவரித்த தீர்க்கதரிசனத்தின் இப்பகுதியைப் பற்றி மத்தேயு ஏவுதல் பெற்ற விளக்கம் ஒன்றைக் கொடுக்கின்றார் (மத். 1:23).*

*மூன்றாவது வகைத் தீர்க்கதரிசனமாக உள்ளது சிறப்பு வகை/ குறிப்பிடத்தக்க வகையான தீர்க்கதரிசனம் ஆகும், இது ஒரு எதிர்கால நிகழ்ச்சி அல்லது சூழ்நிலையை ஏதாவது ஒரு வழியில் முன் சித்தரிப்புச் செய்கின்றது. உதாரணமாக, யோசேப்பு மரியாளையும் குழந்தையாய் இருந்த இயேசுவையும் அழைத்துக்கொண்டு, ஏரோதின் கோபத்திலிருந்து தப்பிக்கும்படியாக எகிப்துக்குத் தப்பிச் சென்றார், மற்றும் ஏரோதின் மரணம் வரையிலும் அவர் அங்கேயே (அவர்களுடன்) தங்கியிருந்தார். அவர்கள் எகிப்திலிருந்து நாசரேத்தூருக்குத் திரும்பியது என்பது ஒரு சிறப்பு வகைத் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றியது. இந்தத் தீர்க்கதரிசனத்தின் அர்த்தம் பற்றி நாம் உறுதியான கருத்துக் கொண்டிருக்க முடியும், ஏனென்றால் அவர்கள் எகிப்திலிருந்து திரும்புதல் பற்றி, "எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன் என்று, தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தரால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது" (மத். 2:15) என்று மத்தேயு கூறினார். இதற்கு மத்தேயு குறிப்பிட்ட பழைய ஏற்பாட்டு வசனப் பகுதியான ஓசியா 11:1 என்பது, யெகோவா தம் மக்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து வெளியேற்றிக் கொண்டு வந்த நிகழ்வின் மறைவான வரலாற்றுக் குறிப்பாக உள்ளது. இவ்விதமாக, இஸ்ரவேலர் எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்து வெளிவருதல் என்பது, கிறிஸ்து குழந்தையாய் இருந்த வேளையில் எகிப்திலிருந்து வெளியே வந்த மிகவும் மாபெரும் நிகழ்ச்சியின் சிறப்பு வகையாக அல்லது முன் சித்தரிப்பாக உள்ளது - இதை நாம் எதிர் வகை என்று கூறுவோம். சிறப்பு வகைத் தீர்க்கதரிசனங்கள் என்பவை தெளிவற்றவையாக உள்ளன, மற்றும் நாம் அவற்றைப் புரிந்து கொள்ளுதல் மற்றும் விளக்கப்படுத்துதல் ஆகியவற்றிற்கு ஏவுதல் பெற்ற விளக்கங்களின் மீது பெருமளவு சார்ந்திருக்க வேண்டும்.*

*இராஜ்யம் அல்லது சபை என்பது பற்றி இயேசு கூறிய தீர்க்க தரிசனங்களை நாம் குறிப்பாகக் கவனிப்போம் - இவற்றில் பெரும்பாலானவை திட்டவட்டமானவைகளாக உள்ளன. இயேசு நமது அரசராகவும், பிரதான ஆசாரியராகவும் இருக்கின்றார், ஆனால் அவர் தேவனுடைய தீர்க்கதரிசியாக வும் இருந்தார். மோசே, "உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்; அவருக்குச் செவி கொடுப்பீர்களாக" (உபா. 18:15) என்று கூறினார். மோசேயின் இந்தத் தீர்க்கதரிசனம் இயேசுவைக் குறித்தது என்று அப். 3:18-23ல் பேதுரு விளக்கப்படுத்தினார். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவரும் கூட இயேசுவைப் பற்றி, "பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார் ..." (எபி. 1:1, 2) என்று கூறினார்.*

*தேவனுடைய தீர்க்கதரிசி என்ற வகையில் இயேசு, சபை அல்லது வர இருந்த இராஜ்யம் என்பது பற்றி பல முன்னுரைத்தல்களை ஏற்படுத்தி*

யிருந்தார். பழைய ஏற்பாட்டு யுகத்தின் தீர்க்கதரிசனங்களைப் போலவே, இவருடைய வெளிப்படுத்துதல்களும் நிறைவேற்றப்பட்டன என்பதை, புதிய ஏற்பாடு மற்றும் வரலாறு ஆகியவற்றைப் பயிலும் எந்த ஒரு மாணவரும் உற்று நோக்க முடியும். சபையைப் பற்றி இயேசு ஏற்படுத்திய முன்னுரைத்தல்களைச் சிந்தித்துப் பார்த்தல் என்பது இராஜ்யத்தின் தொடக்க வேளை மற்றும் இயல்பு ஆகியவற்றைத் தீர்மானிப்பதில் விசேஷித்த அறிவுறுத்தல் தருவதாக உள்ளது.

## விரைவில் வருவதாயிருந்தது

இராஜ்யம் விரைவில் வர இருந்ததாக இயேசு முன்னுரைத்தார். அது அருகில் அல்லது ''சமீபமாய்'' இருந்தது. அது ''இருந்ததாக'' அல்லது நிகழ்காலத்தியதாக இருந்ததில்லை. ஆனால் அது ''சமீபமாய்'' அல்லது நெருங்கிக் கொண்டிருந்ததாக இருந்தது. நாம் சில வேளைகளில் கூறுகின்றபடி, இது ஸ்தாபிக்கப்பட்ட வேளை என்பது "அருகாமையில்" அல்லது "மிகத் தொலைவில் இல்லாத நிலையில்" இருந்தது.

இராஜ்யம் "சமீபித்திருந்ததால்" மக்கள் மனந்திரும்ப வேண்டும் என்று பிரசங்கித்ததன் மூலம் யோவான் ஸ்நானன் இயேசுவின் ஊழியத்திற்கு வழியை ஆயத்தம் பண்ணினார். யோவானைப் பற்றி, ''அந்நாட்களில் யோவான் ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து; மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான்'' (மத். 3:1, 2) என்று மத்தேயு கூறினார்.

இயேசு தம் ஞானஸ்நானம் மற்றும் தாம் சோதிக்கப்படுதல் ஆகியவற்றைத் தொடர்ந்து, யோவான் பிரசங்கித்திருந்த இராஜ்யத்தின் அருகாமை பற்றிய அதே செய்தியைப் பிரசங்கித்தலினால் தம் பூமிக்குரிய ஊழியத்தைத் தொடங்கினார். அவரைப் பற்றி, "அது முதல் இயேசு: மனந் திரும்புங்கள், பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்" (மத். 4:17) என்று மத்தேயு எழுதினார். வரையரைக்குட் பட்ட கட்டளையை நிறைவேற்றப் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களை இயேசு அனுப்புகையில், அவர்களிடத்தில் அவர், "போகையில், பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள்'' (மத். 10:7) என்று உரைத்தார்.

"பரலோக இராஜ்யமானது இயேசுவின் ஊழியத்தின் போது இருந்தது என்பதாக இயேசு இராஜ்யத்தைப் பற்றிய தம்முடைய மற்ற விளக்கங்களில் சுட்டிக்காட்டியதாகக் காணப்படுவதில்லையா? இந்தக் குறிப்புகள் 'சமீபமாயிருக்கிறது' என்ற முன்னுரைத்தல்களுக்கு முரண்படுவ தில்லையா?" என்று சிலர் கேட்கலாம். அது ஒரு நல்ல கேள்வியாக உள்ளது. அவருடைய எடுத்துரைப்புக்களில் இவ்விதமாய் விளக்கப்படக் கூடிய இரண்டு கூற்றுக்கள் மத்தேயு 11:12 மற்றும் மத்தேயு 12:28 ஆகியவைகளாக உள்ளன: ''யோவான் ஸ்நானன் கால முதல் இது வரைக்கும் பரலோக இராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது, பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக் கொள்ளுகிறார்கள்'' (11:12); ''நான் தேவனுடைய

*ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய இராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே" (12:28).*

---

*காலத்தின் முடிவில் இராஜ்யம் வரும் என்று இயேசு போதிக்கவில்லை, ஆனால் அவருடைய ஊழியத்திற்கு அப்புறம் வரும் காலத்தில் அது வெகு விரைவில் வருவதாயிருந்தது.*

---

*11:12* வசனமானது அதிகம் நெருங்கி வாசிக்கப்படும் பொழுது, வரவிருந்த இராஜ்யம் பற்றிக் கேள்விப்பட்டிருந்து, தேவனுடைய கால அட்டவணையின்படியின்றி, அவர்களுடைய கால அட்டவணையின்படி "அதை உடனடியாக வரச் செய்ய வேண்டும்" என்று விரும்பிய மக்களைப் பற்றி இயேசு பேசியதாகக் காணப்படுகின்றது. இராஜ்யம் வந்திருந்ததாக இயேசு கூறவில்லை, ஆனால் தவறாக வழிநடத்தப்பட்ட, வைராக்கியமான அந்த மக்கள், தேவன் அதைக் கொண்டு வரும் முன்னதாக, பக்குவம் அற்ற நிலையில் அதற்குள் அவசரமாய்ச் செல்ல முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். பட்டுப் பூச்சி ஒன்று தன்காலம் வரும் முன்னே அதன் கூட்டிலிருந்து வெளிப்பட வேண்டும் என்று அதன் புழுக்கூட்டை உடைக்கின்ற சிறு பிள்ளைகளுடன் இவர்களை ஒப்பிட முடியும்.

*12:28*ல் இயேசு, தாம் பெயல்செபூலின் வல்லமையினால் குணப்படுத்துவதாகக் குற்றம் சாட்டப்பட ஏதுவானதாயிருந்த, அசுத்த ஆவியைத் துரத்திய ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டார். இந்த அற்புதத்தைத் தேவனுடைய வல்லமையினால் செய்ததாகச் சுட்டிக்காட்டியதன் மூலம் இக்குற்றச் சாட்டிற்குப் பதில் அளித்த அவர், இவ்விதமாக தாம் தெய்வீகமானவர் என்று நிரூபித்தார். அவர்களின் மத்தியில் தேவகுமாரனுடைய பிரசன்னம் இருத்தல் என்பதே, தேவனுடைய இராஜ்யம் இவ்வுலகில் "உண்டாகத்" தொடங்கி விட்டது என்று அர்த்தப்படுத்திற்று. இராஜ்யம் இன்னும் வந்திருந்ததில்லை, ஆனால் அவர்கள் மத்தியில், வரவிருந்த இராஜ்யத்தின் இராஜாவான தேவனுடைய குமாரனின் பிரசன்னம் இருந்ததன் மூலம், இது வந்து கொண்டிருந்த செயல்முறையில் இருந்தது.

தெளிவான வசனப்பகுதிகள் தெளிவற்ற வசனப்பகுதிகளை விளக்க அனுமதிக்க வேண்டும் என்பது வேதாகம விவரிப்புகளின் இன்றியமையாத விதியாக உள்ளது. ஆகையால், யோவான் மற்றும் நமது கர்த்தர் ஆகியோருடைய பிரசங்கித்தல்களில் உள்ள "சமீபித்திருக்கிறது" என்ற சொற்றொடரானது இராஜ்யம் வருகின்ற காலம் பற்றிக் கொடுக்கப்படும் குறிப்பான சைகையாகக் காணப்படுகின்றது. இது, தேவனுடைய காலக் கோட்பாடு பற்றி இரண்டு சத்தியங்களை உறுதியாக நிலைநாட்டுகின்றது: முதலாவது, அவர்கள் பிரசங்கித்துக் கொண்டிருந்த வேளையில் இராஜ்யம் வந்திருந்ததில்லை, ஆனால் எதிர்காலத்தில் இனி வரவேண்டியதாக இருந்தது; இரண்டாவது, இராஜ்யமானது விரைவில் வரவேண்டியதாயிருந்தது - இதன் வருகையானது உடனடியானதாயிருந்தது. இந்த சத்தியங்கள்

முக்கியமற்ற விபரங்களாகவோ, நமது ஆழ்ந்த சிந்தனையைப் பெறத் தகுதியற்றவைகளாகவோ இருப்பதில்லை. இவைகள் மிக முக்கியமான பாடமாக, காலத்தின் முடிவில் இராஜ்யம் வரும் என்று இயேசு போதிக்காமல், தம் ஊழியத்திற்குப் பின் காலத்தில் வெகுவிரைவில் வருவதாக நமக்குப் போதிக்கின்றன. இந்தச் சொற்றொடரானது இராஜ்யம் இப்பொழுது இங்குள்ளது மற்றும் நமக்கு இது ஒரு எதிர்கால எதிர்பார்ப்பாக இருப்பதில்லை என்பதையும் இந்தச் சொற்றொடர் மறைமுகமாய் உணர்த்துவதால் நாம் மகிழ்வடையலாம்!

எங்களுடைய பிள்ளைகள் சிறு வயதினர்களாய் இருந்த பொழுது, அவர்கள் பெற விரும்பும் ஒரு பொம்மை அல்லது வேறு ஏதாவது பொருட்களை வாங்கித் தருவதற்கு அவர்களைக் கடைக்கு அழைத்துச் செல்வதாக நாங்கள் சிலவேளைகளில் ஒப்புக் கொள்வது உண்டு. ஒருவேளை அவர்கள் தங்களின் பிறந்த நாளின் போதோ அல்லது வேறு சில நிகழ்ச்சிகளின் போதோ பரிசொன்றை வாங்கிக் கொள்வதற்குப் பணம் பெறுவது உண்டு. நாங்கள், "சிறிது நேரம் கழித்து நீங்கள் விரும்புவதை வாங்க நாம் கடைக்குச் செல்வோம்'' என்று வாக்களிப்பது உண்டு. எதிர்பார்ப்பின் வழியே கடந்து கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கு நேரம் மெதுவாக நகருவதாகக் காணப்படுகின்றது. ஒவ்வொரு நிமிடத்திற்கும் ஒருமுறை, அவர்கள், "செல்வதற்கான நேரம் வந்ததா? இப்பொழுது நாம் செல்லப்போகிறோமா?" என்று அவர்கள் கேட்பார்கள். நாங்கள், "இல்லை, இப்பொழுதே அல்ல. ஒரு சில நிமிடங்களில் நாம் செல்வோம். செல்வதற்கு ஏறக்குறைய நேரமாகி விட்டது" என்று கூறுவோம். "சற்று நேரத்தில்" என்ற சொற்றொடரை அவர்கள் புரிந்து கொள்வது என்பது கடினமாய் இருக்கும். அவர்களால் காத்திருக்க முடியாது - ஏனெனில் அவர்களைப் பொறுத்த மட்டில், வாழ்க்கை என்பது இப்பொழுதே வாழப்படுவதாக உள்ளது. சிலவேளைகளில் நாங்கள், "எப்பொழுது, செல்வோம் என்று இனியும் கேட்காதீர்கள். செல்லும் நேரம் வரும் பொழுது நான் உங்களிடம் கூறுவேன்" என்று மட்டும் சொல்ல வேண்டியிருக்கும்.

"சமீபித்துள்ளது'' மற்றும் "அருகாமை'' என்ற சொற்றொடரானது யோவானாலும் இயேசுவாலும் பயன்படுத்தப்பட்ட வகையில், இராஜ்யம் வருவதாயிருந்த எதிர்காலத்தைக் குறித்தது மற்றும் இராஜ்யம் நிகழ் காலத்தில் இருந்ததில்லை என்பதையும் மறைவாக உணர்த்திற்று. அவற்றின் அடிப்படையில், பரலோக இராஜ்யம் விரைவில் வரும் என்று யோவானும் இயேசுவும் போதித்த நாட்களின் போது இராஜ்யம் இருந்தது என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது, ஆனால் அதற்கு மாறாக, இராஜ்யமானது இயேசுவின் ஊழிய முடிவின் போதோ அல்லது அதற்குச் சற்றுப் பின்னதாகவோ வந்தது என்று நாம் நியாயமாக எதிர்பார்க்க முடியும்.

## பெலத்தோடே வருதல்

இராஜ்யமானது தெய்வீக பலத்துடன், மாபெரும் வல்லமையுடன் வரும் என்று இயேசு அறிவித்தார். மாற்கு 9:1ல், "... இங்கு நிற்கிறவர்களில்

சிலர் தேவனுடைய இராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசி பார்ப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" என்பதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த வசனப் பகுதியில் இயேசு, தாம் இதைப் பேசிய பொழுது இருந்த சிலருடைய வாழ்நாள் காலத்திலேயே இராஜ்யம் பலத்தோடே வரும் என்று வெளிப்படுத்தினார். நமது கர்த்தருடைய (இந்த) தீர்க்கதரிசனமானது மூன்று முடிவுகளை (நாம்) பெறும்படி கேட்டுக் கொள்கின்றது: (1) அவர் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் சிலருடைய வாழ்நாள் காலத்திலேயே இராஜ்யம் வரும். (2) அவரது உரையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் ஒவ்வொருவரும், இராஜ்யம் வரும் வேளை வரையிலும் உயிருடன் இருக்க மாட்டார்கள். (3) வருவதாயிருந்த இராஜ்யத்துடன் தெய்வீக வல்லமை இணைந்திருக்கும் என்பது அதன் அடையாளப்படுத்தும் குறிகளில் ஒன்றாயிருக்கும்.

அன்றாட வாழ்வில் நாம் அனைவருமே அடையாளப்படுத்தும் குறிகளைப் பயன்படுத்துகின்றோம். உதாரணமாக, இவைகள் ஒரு நபர் இன்னொருவருக்குச் செய்தியொன்றை அனுப்பும் போது கையாளச் சுலபமாக உள்ளன. எனது மனைவி, என்னிடத்தில் எந்த ரொட்டியை வாங்க வேண்டும் என்று குறிப்பிடாமல் என்னை மளிகைக் கடைக்கு ரொட்டி வாங்கி வரும்படி அனுப்புவது அபாயமானது என்று அறிந்துள்ளார்கள். நான் மளிகைக் கடைக்குச் செல்ல முயற்சிக்கையில், வழக்கமாக எனது சிந்தையில் பிரசங்கம் ஒன்றை உருவாக்கிக் கொண்டிருப்பேன் என்பதை அறிந்துள்ள என் மனைவி, ரொட்டியின் அடையாளப் பெயரைக் கூறுவதுடன், எந்த வகையான ரொட்டியை வாங்க வேண்டும் என்றும் கூறுவார்கள். அவர்கள், "கலோனியல் கோதுமை ரொட்டி ஒன்று வாங்கி வாருங்கள்" என்று கூறலாம். தனிப்படுத்தும் பண்புகள் இல்லாத பொழுது நான் தவறான ரொட்டியை வாங்கி வந்து விடுவேன் என்று அவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

இராஜ்யத்தின் ஸ்தாபித்தலுக்கான அடையாளப்படுத்தும் குறிகள் சுவிசேஷங்களில் தோன்றத் தொடங்கின. யோவான் மற்றும் இயேசு ஆகியோரின் போதனையிலிருந்து, வருவதாயிருந்த இராஜ்யம் "சமீபித் திருந்தது" என்று நாம் அறிகின்றோம். இது, நாம் இந்த இராஜ்யத்தின் வருகையானது இயேசுவின் ஊழியத்தின் முடிவிலோ, அல்லது அதைத் தொடர்ந்து விரைவிலோ இருந்தது என்று காண வேண்டும் என்பதாக அர்த்தப்படுத்துகின்றது. மேலும் நாம், மாற்கு 9:1ல் இயேசு உரைத்த வற்றைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் சிலருடைய வாழ்நாள் காலத் தின் போதே இராஜ்யம் பலத்தோடு வர வேண்டியதாயிருந்தது என்றும் அறிகின்றோம். அது விரைவில் வர வேண்டியதாயிருந்தது, மற்றும் அதன் வருகையானது தெய்வீக பலம் கொண்டு குறிப்பிடப்படுவதாயிருந்தது.

## ஆவியுடன் வருதல்

ஆவியானவர் வந்த பொழுது இராஜ்யம் வரும் என்று இயேசு தம்

போதனைகளில் உரைத்திருந்தார். அவர் பரத்துக்கேறுவதற்குச் சற்று முன்னர், தம் அப்போஸ்தலர்களிடம், "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது, நீங்கள் பெலனடைந்து ..." (அப். 1:8) என்று உரைத்தார். இதை இன்னொரு வழியில் கூறுவதென்றால், இராஜ்யத்தின் வருகையானது பரிசுத்த ஆவியானவரை அற்புதமாய்ப் பொழிந்தருளும் நிகழ்ச்சியினால் பண்புபடுத்தப்படும்.

இதற்கு முன்பே இயேசு (மாற்கு 9:1ல்) தம்முடன் நின்று கொண்டிருந் தவர்களில் சிலர் தேவனுடைய இராஜ்யம் பெலத்தோடே வருவதைக் காண்பார்கள் என்று உரைத்திருந்தார். அப். 1:8ல், அவர் அப்போஸ்தலர் களிடத்தில், ஆவியானவர் அவர்கள் மீது இறங்கி வரும் பொழுது, அவர்கள் பெலன் அடைவார்கள் என்று உரைத்தார். மற்றும் இயேசு, அப்போஸ்தலர் களின் மீது பரிசுத்த ஆவி இறங்கும் இந்த நிகழ்ச்சியை, பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெறுதல் என்றும் அடையாளப் படுத்தினார். இயேசு தம் அப்போஸ்தலர்களுடன் செலவிட்ட கடைசி நாட்களைப் பற்றி லூக்கா பின்வருமாறு எழுதினார்:

> அன்றியும், அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது, அவர்களை நோக்கி: "யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்" என்று கட்டளையிட்டார்.
>
> அப்பொழுது கூடிவந்திருந்தவர்கள் அவரை நோக்கி: "ஆண்டவரே, இக்காலத்திலா இராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்" என்று கேட்டார்கள். அதற்கு அவர்: "பிதாவான வர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல. பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது, நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" என்றார் (அப். 1:4-8).

இன்னும் மற்றொரு வேளையில் இயேசு அவர்களிடம், "நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்" (லூக். 24:48, 49) என்று உரைத்ததாக லூக்கா பதிவு செய்தார்.

கல்வியாளர்கள், "மீண்டும் செய்தல் என்பது கற்றலின் விதியாக உள்ளது" என்று பரிந்துரைக்கின்றனர். "ஒரு விஷயத்தின் உண்மைகளைச் சரிபார்த்துப் பகுத்துணர்தல் என்பது மிக நுண்மையான தன்மையின் விதியாக உள்ளது" என்றும் கூறப்பட முடியும். இராஜ்யத்தின் வருகை பற்றி நாம் கண்டுள்ள உண்மைகளைக் கவனமாக எடை போடுங்கள்: (1) இயேசுவின் ஊழியத்தினுடைய முன்பகுதியில் இராஜ்யம் "சமீபித்திருந்தது." (2) இயேசுவின் ஊழியத்தினுடைய பின்பகுதியில் அவரது உரையைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் சிலருடைய

*வாழ்நாளிலேயே இராஜ்யம் வருவதாயிருந்தது. (3) இராஜ்யம் பெலத்தோடே வருவ தாயிருந்தது. (4) அப்போஸ்தலர்கள் மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கும் பொழுது அவர்களுக்குப் பெலம் வருவதாயிருந்தது. (5) ஒருவேளை, கடைசி முறையாக இயேசு தம் அப்போஸ்தலர்களிடம் பேசிய பொழுது, சில நாட்களுக்குள் அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெறுவார்கள் என்று கூறினார். (6) பரிசுத்த ஆவியானவரின் வருகைக்காக அல்லது பெலத்தின் வருகைக்காக அப்போஸ்தலர்கள் எருசலேமில் காத்திருக்க வேண்டியிருந்தது. இந்த எல்லா உண்மைகளிலும், இயேசு தம் சீஷர்களுக்கு, இராஜ்யம் வரும் பொழுது அதை அவர்கள் அறிவார்கள் என்று கூறினார், ஏனெனில் அதன் வருகையானது தனிப்பட்ட இந்த எல்லாப் பண்புகளாலும் அடையாளப் படுத்தப்படும்.*

*இது, "காலத்தின் முடிவு எப்பொழுது ஏற்படும்?" என்று கேட்கின்ற யாருக்காவது நாம் அளிக்கக் கூடிய பதிலைப் போன்றுள்ளது. இயேசுவின் மறுவருகையுடன் முடிவு வரும் என்று புதிய ஏற்பாடு கூறுவதாக நாம் அவர்களிடம் கூறுவோம். இது மேலும், கிறிஸ்தவ யுகத்தின் முடிவில் இயேசுவின் வருகைத் தோற்றமானது ஜுவாலித்து எரிகிற அக்கினி மேகங்கள் (2 தெச. 1:7-9; வெளி. 1:7), சகல பரிசுத்த தூதர்கள் (மத். 25:31) மற்றும் கண்கள் யாவும் அவரைக் காணுதல் (வெளி. 1:7) ஆகியவற்றுடன் இருக்கும் என்றும் கூறுகின்றது. எனவே இதை நிச்சயமாக அறிந்துகொள்ள, அவர் வருகின்ற போது இதை நீங்கள் அறிவீர்கள். முடிவு வருகின்ற பொழுது என்ன நடக்கின்றது என்று யாரும் உங்களிடத்தில் கூறத் தேவையிருக்காது! அது போலவே, பரிசுத்த ஆவியானவருடைய வருகை மற்றும் பெலத்தின் வருகை ஆகியவற்றுடன் இராஜ்யம் அல்லது சபை விரைவில் வரும் மற்றும் அது ஸ்தாபிக்கப்படும் என்று இயேசு தம் சீஷர்களுக்குக் கூறினார். அது வரும் பொழுது, அதை அவர்கள் சுலபமாய் அடையாளம் கண்டு கொள்ளுவார்கள் மற்றும் அதைப் பற்றி முழுமையாய் அறிந்து கொள்ளுவார்கள்.*

## முடிவுரை

*இயேசுவின் இந்த முன்னுரைத்தல் எப்பொழுது நிறைவேற்றப் பட்டன? இராஜ்யம் எப்பொழுது வந்தது?*

*கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைத்தொடர்ந்து வந்த முதல் பெந்தெ கொஸ்தே நாளன்று இந்தத் தீர்க்கதரிசனங்கள் யாவும் நிறைவேற்றப் படவில்லையா? பெந்தெகொஸ்தே நாள் வந்த பொழுது, அப்போஸ்தலர் கள்மீது பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டார் (அப். 2:1-4). இந்த ஊற்றப்படுதலுடன் அப்போஸ்தலர்கள் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு ரோம உலகம் முழுவதிலும் சாட்சியாயிருப்பதற்காக உன்னதத்திலிருந்து வந்த வல்லமையால் தரிப்பிக்கப்பட்டனர். அங்கு கூடியிருந்த கூட்டத் தாருக்குப் பேதுரு தம் முதன்மை உரையை நிகழ்த்திய பொழுது, பரிசுத்த ஆவியானவரின் பொழிந்தருளலை அவர் யோவேலின் தீர்க்கதரிசன நிறைவேற்றமாக அடையாளப்படுத்தினார் (யோவே. 2:28-32; அப். 2:16),*

*இது பரிசுத்த ஆவியானவரின் பொழிந்தருளலை "கடைசி நாட்களின்" துவக்கத்துடன் சமமாக்கிற்று. அந்த வேளையில் கிறிஸ்து உயிர்த்து மேன்மைப் படுத்தப்பட்டவராக, தேவனுடைய வலது புறத்தில் அமர்ந்து ஆண்டவராகவும் கிறிஸ்துவாகவும் ஆளுகை செய்தாரென்றும் பேதுரு பிரசங்கித்தார். "அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்" (அப். 2:33) என்று அவர் கூறினார். பேதுருவின் பிரசங்கத்திற்குப் பதில்செயலாக, மூவாயிரம் பேர் விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும் பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் ஆகியவற்றின் மூலமாகக் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, சபையிலே சேர்த்துக் கொள்ளப்பட்டனர் (அப். 2:41). பரிசுத்த ஆவியானவரின் இவ்வருகையானது நமது கர்த்தர் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்ற பத்தாம் நாளிலே நடைபெற்றது (அப். 1:3; 2:1) மற்றும் இவ்விதமாக இது, அவர் பரத்துக்கேறிய சில நாட்களில் (அப். 1:5) அப்போஸ்தலர்களைப் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானப் படுத்துவதாக அவர் அளித்த வாக்குத்தத்தத்துடன் இசைந்துள்ளது. மேலும், பரிசுத்த ஆவியானவரின் வருகையானது யோவானும் இயேசுவும் இராஜ்யம் அண்மித்துள்ளது அல்லது சமீபித்திருக்கிறது என்று பிரசங்கித்த நாட்கணக்கின் கால அளவுடன் பொருந்தி வருகின்றது (மத். 3:1; 4:17).*

*கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின் வந்த இந்த பெந்தெகொஸ்தே நாளான்று இராஜ்யத்தின் வருகை நாள் என்ற கருத்தானது கேள்விக்கு அப்பாற்பட்டதாக நிலைநிற்கின்றது. இது கர்த்தர் தமது சபையை நிலை நாட்டிய நாளாக மனித குல வரலாற்றில் நிலைநின்றுள்ளது. கிறிஸ்துவின் தற்கால ஆளுகையின் கண்ணோக்கில் "சபை" மற்றும் "இராஜ்யம்" என்ற சொற்பதங்கள் மாறுபட்ட கண்ணோட்டக் கருத்துக்களைக் குறித்தாலும், அவை இரண்டுமே தேவன் மற்றும் கிறிஸ்து ஆகியோருடன் ஒரே விதமான அடிப்படை உறவுமுறையையே குறிக்கின்றன. சபை என்பது கர்த்தருடைய நித்திய இராஜ்யமாக உள்ளது.*

*கிறிஸ்துவின் யுகத்தில் வாழ்தல் என்பது எவ்வளவு சிலாக்கியமானதாக உள்ளது! இந்த யுகமானது, "இராஜ்யம் - வருகின்ற" யுகமாக, கிறிஸ்துவின் ஊழியம் செய்யப்பட்ட நாட்களின் போது வாழ்ந்த தீர்க்கதரிசிகளும் மக்களும் ஒரு நாளில் இராஜ்யம் வருமென்று எதிர்பார்த்தது போன்ற யுகமாக இல்லாமல் உள்ளது; இது "இராஜ்யம் - வந்திருக்கின்ற" யுகமாக உள்ளது. இராஜ்யம் இங்குள்ளது, நாம் அதன் குடிமக்களாக வாழ முடியும், கிறிஸ்துவின் மரணமும் அந்த இராஜ்யத்தின் ஸ்தாபனமும் அளிக்கின்ற எல்லா தெய்வீக ஆசீர்வாதங்களில் பங்கேற்கவும் முடியும்.*

*புறக்கணிக்கப்பட்ட வாய்ப்பு என்பதின் துன்பமானது மனித குலத்தின் மாபெரும் துன்பம் என்பதை நாம் யாவருமே ஒப்புக் கொள்வோம். இது பெரும்பான்மையானவர்களின் தவறாக உள்ளது, ஏனென்றால் இது சுலபமாகச் செய்யப்பட்டிருக்கக் கூடியது. ஆனால் கைவிடப்பட்டதால் நடக்காதது என்ன என்பதை விவரிக்கின்றது. தேவனுடைய இராஜ்யத்தின் யுகமாகிய இந்த யுகத்தில் வாழ்ந்து, தேவனுடைய இராஜ்யத்தில்*

*பிரவேசிக்கவும், அதன் குடிமகனாக வாழவும் மறுத்தல் என்பது ஒரு நபரிடத்தில் அறியப்பட்டதிலேயே மாபெரும் பிழையாக இருக்கின்றது, இதைக் காட்டிலும் பெரிய பிழையொன்றை அவரிடம் அறிய முடியாது என்பது நிச்சயம்.*

*தென்னாப்பிரிக்காவில் ஒரு சிறுவர்கள் குழுவினர், சிறிய, உருண்டையான, வண்ணக் கற்களால் ஆன குண்டுகளை வைத்து கோலி விளையாடிக் கொண்டிருந்தனர். ஆராய்ந்து பார்த்ததில், யாரோ ஒருவர் அந்தக் கற்கள் வெட்டப்படாத வைரங்களாய் இருந்தன என்று கண்டறிந்தார். அதைப் பற்றி நினைத்துப் பாருங்கள்! அவர்கள் வைரங்களைக் கோலிகளாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தனர் - ஒரு பெரிய விலையுயர்ந்த உடமையைக் கொண்டு பிள்ளைகள் விளையாட்டை விளையாடி கொண்டிருந்தனர்!*

*நாம் நெருங்கிப் பார்த்தால், இந்தச் சித்தரிப்பில் நம்மையே நாம் காணலாம். கோலி விளையாட்டில் ஆழ்ந்து ஈடுபட்டுள்ள பையன்களைப் போலவே நாமும் எல்லா வகையான செயல்களினாலும், முழு வேலை அட்டவணைகளினாலும், வற்புறுத்தும் கடமைகளினாலும் சூழப்பட்டுள்ளோம். நம் மத்தியில், கிறிஸ்துவின் பலியினால் தேவன் பரலோகத்திலிருந்து அனுப்பிய விலைமதிப்புள்ள/அருமையான வைரமான, தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசித்தல் என்ற வாய்ப்பு இருப்பதை நாம் முற்றிலும் அறியாமல் இருப்பவர்களாய்க் காணப்படுகின்றோம். தேவனுடைய வைரமானது நாம் அடையக் கூடிய வகையிலேயே உள்ளது, ஆனால் கோலி விளையாட்டிற்கு நாம் நமது முழுக்கவனத்தையும் கொடுத்து விட்டு நாம் அதைக் கண்டும் காணாது விடுகின்றோம்.*

*உங்களைப் பொருத்தமட்டில் விஷயம் எவ்வாறுள்ளது? வாழ்க்கையை கோலிகளின் சிறு விளையாட்டாக்குவதுடன் நீங்கள் திருப்தியடைகின்றீர்களா? அல்லது தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதினால் தேவனுடைய விலைமதிப்பான/அருமையான வைரத்தை அடைந்து, அதை எடுத்துக் கொள்வீர்களா?*

## படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. *சபையைப் பற்றி இயேசு உரைத்த மாறுபட்ட வகையான சில தீர்க்கதரிசனங்கள் யாவை?*
2. *இயேசு நமது தீர்க்கதரிசியாய் இருக்கின்றாரா? உங்கள் பதிலுக்கு நிரூபணம் கொடுக்கவும்.*
3. *''சமீபித்திருக்கிறது'' என்ற சொற்றொடரின் மறை கருத்துக்களைப் பற்றிக் கலந்துரையாடவும்.*
4. *மாற்கு 9:1 வசனப் பகுதியானது இராஜ்யத்தின் வருகையினுடைய காலத்துடன் எவ்விதம் தொடர்புபடுகின்றது?*

5. இராஜ்யத்தின் வருகை பற்றி மாற்கு 9:1 மறைவாய் உணர்த்துவது என்ன?
6. இராஜ்யத்தின் வருகையானது ஆவியானவரின் வருகையினால் பண்பு படுத்தப்பட வேண்டும் என்று காண்பிக்கின்ற வசனங்கள் யாவை?
7. "பெலத்தோடே வருதல்" என்பதும் "ஆவியானவருடன் வருதல்" என்பதும் ஒன்றே என்று நீங்கள் கூறுவீர்களா?
8. மிக நுண்ணிய தன்மையின் விதி என்ன?
9. இயேசுவின் முன்னுரைத்தல்கள் அப். 2ல் பெந்தெகொஸ்தே நாளில் எவ்வாறு நிறைவேறின என்று கலந்துரையாடவும்.
10. "சபை" மற்றும் "இராஜ்யம்" என்ற இரு வார்த்தைகளும் ஒரே உயிர்ப் பொருளைக் குறிக்கின்றனவா? உங்கள் பதிலை விளக்கப்படுத்தவும்.
11. இது "இராஜ்யம் வருகின்ற" யுகமாய் உள்ளதா?
12. இன்றைய நாட்களில் ஒருவர் இராஜ்யத்திற்குள் எவ்வாறு பிரவேசிக்கின்றார்?